

# இரண்டு வார்த்தை

**எ**திர்கால பாரத தேசத்தின் சிற்பிகளாக திகழப் போகிறவர்கள் மாணவ மாணவியர்தான். அவர்களை உருவாக்குகிற மாபெரும் பொறுப்பு பெற்றோர்களுக்கு உண்டு. அஸ்திவாரம் பலமாக இருந்தால் தான் எழுப்பும் கட்டடம் உறுதியாக இருக்க முடியும். அதேபோல இளம் பருவத்தில் மாணவர்களின் உள்ளத்திலே எதை விதைக்கிறோமோ... அதற்கு ஏற்றாற்போல் அவர்கள் வடிவம் பெறுவார்கள். நம்முடைய முன்னோர்களைப் பற்றிய செய்திகளை மாணவ சமுதாயம் தெரிந்து கொண்டால் படிப்பில் மட்டுமின்றி மற்ற எல்லாத் துறைகளிலும் அவர்கள் நிகரற்று விளங்குவார்கள்.

நம்முடைய முன்னோர்களின் பெருமைகளை மறந்ததே நம்முடைய தாழ்வுகளுக்கெல்லாம் மூலகாரணமாக உள்ளது. அதனை மாற்றுகிற விதத்தில் ''மாணவர்களுக்கான அறிவுக் கதைகள்'' என்னும் தலைப்பில் இந்நூல் உதயமாகியுள்ளது. பல கற்பனை கதைகளுடன் இராமாயண, மகாபாரத கதைகளும் மாணவ சமுதாயத்திற்கு பயன் படுகின்றவிதத்தில் இதில் இண்ணக்கப்பட்டுள்ளன. கதைகளுக்கு முடிவில் மாணவர்களுக்கான அறிவுரைகளும் இடம்பெற்றுள்ளன. நம்முடைய பாரததேசம் தற்போதைய காலகட்டத்தில் வல்லரசாக வலிமை பெற்று வருகிறது.

அதனை மேலும் வலிவாக்கும் மாபெரும் பொறுப்பு மாணவ, மாணவியரின் கரங்களில்தான் ஒப்படைக்கப்படும். அந்த கரங்களை

உறுதியுடைய கரங்களாக மாற்ற வேண்டிய மாபெரும் பொறுப்பு பெற்றோர்களுக்கும், ஆசிரிய பெருமக்களுக்கும் உண்டு. அதேபோல் பெற்றோர்களையும் ஆசிரிய பெருமக்களையும் மதித்துப் போற்ற வேண்டிய கடமை மாணவ சமுதாயத்திற்கு உள்ளது. இதற்கு உறுதுணையாக விளங்குகிற வகையிலும், அறிவு வளர்ச்சியினை தூண்டுகிற விதத்திலும் இந்நூலில் இடம் பெற்றுள்ள கதைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்நூல் தற்கால மாணவ சமுதாயத்திற்கு மட்டுமின்றி எதிர் காலத்தில் உருவாகப் போகும் மாணவ சமுதாயத்திற்கும் பயன்பட வேண்டும் என்கிற இலட்சியநோக்கில் உதயமாகியுள்ளது. எனது தந்தையாரும் வழிகாட்டியும், குருவுமாகிய ஸ்ரீ பரமஹம்ச புவனேஸ்வரி சுவாமிகளின் எண்ணங்களை செயல் வடிவம் செய்திட நான் உறுதி பூண்டுள்ளேன். அவற்றில் மாணவ சமுதாயம் பலம் பெற்று திகழ வேண்டும் என்பதும் முக்கியமான ஒன்றாகும். இந்நூலை மாணவ, மாணவியர் மனதை ஒருநிலைப்படுத்தி படித்து தங்கள் பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றிடவும், எதிர்காலத்தில் மிக உயர்ந்த பதவிகளைப் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திடவும் பரமஹம்ச ஸ்ரீ புவனேஸ்வரி சுவாமிகளின் திருவடிகளை சிந்திக்கின்றேன்.

அன்புடன்

**பரமஹம்ச ஸ்ரீமத் பரத்வாஜ் சுவாமிகள்**